


**13. 01. 2026**

## தலைப்புச் செய்திகள்

**1.** பொங்கல் உள்ளிட்ட அறுவடை திருநாட்களை ஒட்டி குடியரசு தலைவர் திருமதி. திரௌபதி முர்மு நாட்டு மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார்.

2. இந்தியாவின் பிரிக்ஸ் தலைமைத்துவத்தில் வலிமை, புத்தாக்கம், ஒத்துழைப்பு, நிலைத்தன்மைக்கு உயர் முன்னுரிமை வழங்கப்படும் என்று மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் எஸ். ஜெய்சங்கர் கூறியுள்ளார்.

**3.** தமிழ்நாட்டில் சேமிப்பு கிடங்கு மற்றும் சுழல் பொருளாதார முதலீட்டு கொள்கையை முதலமைச்சர் திரு. மு. க. ஸ்டாலின் சென்னையில் இன்று வெளியிட்டார்.

**4.** தமிழக அரசின் 2025-ம் ஆண்டிற்கான இலக்கிய மாமணி விருதுகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

5. தமிழகத்திலிருந்து வடகிழக்கு பருவமழை அடுத்த மூன்று தினங்களில் விலகுவதற்கான வாய்ப்புகள் உள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

## இனி விரிவான செய்திகள்

**************

### குடியரசு தலைவர்

பொங்கல் லோஹ்ரி, மகர சங்கராந்தி, பிஹு உள்ளிட்ட அறுவடை திருநாட்களை ஒட்டி குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்மு நாட்டு மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார்.

நாட்டின் வேளாண் பாரம்பரியத்தையும், தேசத்தின் ஒற்றுமை உணர்வையும் இப்பண்டிகைகள் வெளிப்படுத்துவதோடு, நம் நாட்டின் எழுச்சிமிகு கலாச்சார மரபுகளை பிரதிபலிப்பதாக குறிப்பிட்டார்.

நாட்டிற்கு உணவளிக்கும் உழவர்களுக்கும், புவி தாய்க்கும் நன்றி தெரிவிக்க இப்பண்டிகைகள் ஒரு வாய்ப்பாக அமைந்துள்ளது என்று குறிப்பிட்டாார்.

இத்திருநாட்களின்போது, அன்பும் ஒருமைப்பாட்டுணர்வும் தழைத்தோங்க அவர் வாழ்த்தியுள்ளார்.

**************

**ஜெய்சங்கர்**

இந்தியாவின் பிரிக்ஸ் தலைமைத்துவத்தில் வலிமை, புத்தாக்கம், ஒத்துழைப்பு, நிலைத்தன்மை ஆகிய நான்கு அம்சங்களுக்கு உயர் முன்னுரிமை வழங்கப்படும் என்று மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் எஸ்.ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நடப்பாண்டிற்கான பிரிக்ஸ் உச்சி மாநாட்டின் சின்னத்தையும், கருப்பொருளையும் இணையதளத்தையும் அறிமுகம் செய்த அமைச்சர், அரசியில் பொருளாதாரம், நிதி கட்டமைப்பு, கலாச்சாரம் மக்கள் பரிவர்த்தனைகள் பாதுகாப்பு போன்றவற்றிற்கு இதுவழிகோலும் என்றார்.

பிரிக்ஸ் நாடுகளின் திறன்களை உலகளாவிய நலத்திற்காக முன்னெடுத்து செல்வதற்கான ஆலோசனைகள் உச்சி மாநாட்டின்போது மேற்கொள்ளப்படும் என்றார்.

பிரிக்ஸ் கூட்டமைப்பின் 20 ஆண்டுகள் நிறைவடைய உள்ள நிலையில் ஒத்துழைப்பு, சந்தை வாய்ப்புகள் மற்றும் வளரும் பொருளாதாரங்களுக்கு இத்தளம் முக்கிய பங்காற்றுவதாக குறிப்பிட்டார்.

**************

**உபேந்திரா**

முப்படைகளின் ஒருங்கிணைப்பிற்கு ஆபரேசன் சிந்தூர் துல்லிய தாக்குதல் ஒரு சிறந்த எடுத்துக்காட்டாக திகழ்கிறது என்று ராணுவ தலைவர் ஜென்ரல் உபேந்திரா திவேதி தெரிவித்துள்ளார்

புதுதில்லியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், பஹல்காம் தீவிரவாத தாக்குதலை தொடர்ந்து அரசு ஒரு தீர்க்கமான முடிவை உறுதியுடன் செயலாற்றியதாக குறிப்பிட்டார்.

எதிரிகளின் 9 தீவிரவாத முகாம்களை முப்படைகள் தகர்த்ததை எடுத்துரைத்த அவர், அதனை தொடர்ந்து ஜம்மு காஷ்மீர் மற்றும் மேற்கு எல்லைகள் கட்டுக்குள் இருப்பதாக கூறினார்.

சென்ற ஆண்டு 31 தீவிரவாதிகள் அழிக்கப்பட்டதாக கூறிய அவர், இதில் 65 சதவிகிதம் பேர் பாகிஸ்தான் தொடர்புடையவர்கள் என்றார்.

எவ்வித சவாலையும் சமாளிக்க நாடுகள் தயாராக இருப்பதன் அவசியத்தையும் ஜென்ரல் உபேந்திரா திவேதி வலியுறுத்தினார்.

**************

**அஷ்விணி வைஷ்ணவ்**

அரியவகை கனிமங்களின் உலகளாவிய விநியோக சங்கிலியை வலுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளின் அவசியத்தை மத்திய தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் திரு.அஷ்விணி வைஷ்ணவ் வலியுறுத்தியுள்ளார்.

அமெரிக்காவின் வாஷிங்டன் நகரில் நடைபெற்ற அரியவகை கனிமங்கள் சார்ந்த அமைச்சர்களின் உயர்மட்ட கூட்டத்தில் இன்று உரையாற்றிய அவர், மின்னணுவியல் துறையில் வளர்ந்து வரும் இந்தியா போன்ற நாடுகளுக்கு இந்த கூட்டம் மிகவும் பயனளிக்கும் என்றார்.

**************

**ராஜ்நாத்சிங்**

நாட்டின் தொலைதூர கிராமங்களில் வசிப்பவர்களுக்கும் தரமான மருத்துவ வசதி கிடைப்பதை மத்திய அரசு உறுதி செய்வதாக பாதுகாப்பு அமைச்சர் திரு.ராஜ்நாத்சிங் தெரிவித்துள்ளார்.

லட்சதீவில் பல்துறை மருத்துவ சேவை முகாமை காணொலி வாயிலாக இன்று துவக்கிவைத்து பேசிய அவர், கடற்படை சார்பில் இத்தகைய மருத்துவ முகாம்கள் நடத்தப்படுவதற்கு பாராட்டு தெரிவித்தார்.

முன்கூட்டியே நோய்களை கண்டறிந்து உரிய சிகிச்சைகள், மருந்துகள் விநியோகிப்பது போன்றவை இத்தீவு மக்களுக்கு பெரிதும் பயனளிக்கும் என்றார்.

**************

**முதலமைச்சர்**

தமிழ்நாட்டில் தொழில்துறை சார்பில் சேமிப்பு கிடங்கு மற்றும் சுழல் பொருளாதார முதலீட்டு கொள்கையை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் சென்னையில் இன்று வெளியிட்டார்.

செயற்கை நுண்ணறிவு நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தமும் முதலமைச்சர் முன்னிலையில் கையெழுத்தானது.

பால்வளத்துறையின் சார்பில் 80 கோடி ரூபாய் மதிப்பிலான 8 முடிவடைந்த திட்ட பணிகளை துவக்கிவைத்த அவர்,

ஊர்காவல்படை உறுப்பினர் நியமன ஆணைகளை 7 திருநங்கைகளுக்கு வழங்கினார்.

தனியார் வேலை வாய்ப்பு முகாம் மூலம் தேர்வு செய்யப்பட்ட 3 லட்சமாவது நபருக்கு பணிநியமன ஆணையையும் அளித்தார்.

திருக்கோவிலில் பணிபுரிந்து ஓய்வு பெற்ற பணியாளர்களுக்கு பொங்கல் கருணை கொடைக்கான காசோலைகளையும் முதலமைச்சர் வழங்கினார்.

**************

**விருது**

2026ஆம் ஆண்டுக்கான திருவள்ளுவர் விருது முனைவர் மு.பெ.சத்தியவேல் முருகனாருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

2025-ம் ஆண்டிற்கான தந்தை பெரியார் விருது வழக்கறிஞர் அருள்மொழி,

அம்பேத்கார் விருது சிந்தனை செல்வன்,

பேரறிஞர் அண்ணா விருது அமைச்சர் துரைமுருகன்,

காமராஜர் விருது எஸ்.எம். ஹிதயதுல்லா,

மகாகவி பாரதியார் விருது கவிஞர் நெல்லை ஜெயந்தா-விற்கும் அறிவிக்கப்பட்டுள்ளன.

2025-ம் ஆண்டிற்க்கான இலக்கிய மாமணி விருதுகளும் இன்று அறிவிக்கப்பட்டுள்ளன.

ஆய்வுத்தமிழ், மரபுத்தமிழ் படைப்புத்தமிழ் பிரிவுகளில் விருதுகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

விருதாளர்களுக்கு 5 லட்ச ரூபாய் ரொக்கமும், ஒரு சவரன் தங்க பதக்கமும் வழங்கப்படும்.

வரும் 16ம் தேதி நடைபெறும் நிகழ்ச்சியில் முதலமைச்சர் இவ்விருதுகளை வழங்க உள்ளார்.

**************

**எ.வ.வேலு**

தமிழக அரசின் மடிகணினிகளை மாணாக்கர் உரிய முறையில் பயன்படுத்தி வளர்ச்சி பெற வேண்டும் என்று மாநில பொதுப்பணித்துறை அமைச்சர் திரு.எ.வ.வேலு தெரிவித்துள்ளார்.

திருவண்ணாமலை மாவட்ட அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் மாணாக்கருக்கு இன்று மடி கணினிகளை வழங்கி பேசிய அவர், மாணாக்கரின் விஞ்ஞான அறிவிற்கு இது உத்வேகம் அளிக்கும் என்றார்.

**************

**மீனவர்கள்**

எல்லை தாண்டி மீன்பிடித்ததாக கூறி தமிழக மீனவர்கள் 10 பேரை இலங்கை கடற்படையினர் இன்று அதிகாலை கைது செய்துள்ளனர்.

ராமேஸ்வரத்தை சேர்ந்த இம்மீனவர்கள் படகுடன் யாழ்பாணம் மீன்வளத்துறை அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்படுகின்றனர்.

**************

**ஆதார்**

இந்திய தனித்துவ அடையாள ஆணையத்தின் புதிய ஆதார் சேவை மையம் சென்னை அண்ணாநகரில் இன்று தொடங்கப்பட்டுள்ளது.

மதுரைக்கு அடுத்தபடியாக சென்னையில் தொடங்கப்படும் இரண்டாவது நேரடி மையம் இது என்பது குறிப்பிடத்தக்கது.

நவீன வசதிகளுடனான இந்த மையத்தில் 16 ஆதார் பதிவு இயந்திரங்கள் மூலம் மணிக்கு 100 பேர் வீதம் நாளொன்றுக்கு 800 பேருக்கு சேவை வழங்கும் வகையில் இது வடிவமைக்கப்பட்டுள்ளது.

மாநிலத்தில் மேலும் இத்தகைய 8 மையங்கள் திறக்கப்பட உள்ளதாகவும், வரும் செப்டம்பருக்குள் 30 மையங்கள் செயல்பாட்டிற்கு வரும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிற இ-சேவை மையங்களுக்கு முதன்மை மையமாக இம்மையம் திகழும் என்பதால் பொதுமக்கள் ஆதார் தொடர்பான குறைகளுக்கு இங்கு தீர்வு காணலாம் என்று இதன் துணை தலைமை இயக்குனர் திருமதி ஆனி ஜாய்ஸ் தெரிவித்துள்ளார்.

**************

**கன்னியாகுமரி**

கன்னியாகுமரி கடலில் அமைந்துள்ள விவேகானந்தர் நினைவு மண்டபம் மற்றும் திருவள்ளுவர் சிலைக்கு செல்லும் படகு சேவை பொங்கலை ஒட்டி கூடுதலாக 3 மணி நேரத்திற்கு நீட்டிக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிகக்கிறார்.

**வாய்ஸ்**

**************

**திருவாரூர்**

திருவாரூர் மாவட்டத்தில் பெய்துவரும் தொடர் மழை காரணமாக மஞ்சள் கரும்பு மண்பாண்டங்கள் விற்பனை பாதிக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**வாய்ஸ்**

**************

**திண்டுக்கல்**

திண்டுக்கல் மாவட்டத்தில் வளர்ச்சி அடைந்த இந்தியாவிற்கான ஊரக வேலை வாய்ப்பு உறுதி மற்றும் வாழ்வாதார திட்டம் மிகுந்த பயனளிப்பதாக விவசாயிகள் மத்திய அரசுக்கு நன்றி தெரிவித்துள்ளனர்.

**வாய்ஸ்**

**************

**நெல்லை**

நெல்லை மாவட்ட சுற்றுலா தலங்களில் புலிகள் கணக்கெடுப்பு பணிகள் வரும் 19ஆம் தேதி தொடங்குவதால் 24ஆம் தேதிவரை இப்பகுதிகளுக்கு சுற்றுலா பயணிகள் செல்ல வனத்துறை தடை விதித்துள்ளது.

**இதுகுறித்து எமது செய்தியாளர்**

**வாய்ஸ்**

**************

**இருவரி**

**திருச்சி மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தில்** இன்று நடைபெற்ற பொங்கல் விழாவில் தைவான், அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளை சேர்ந்த வெளிநாட்டினர் பங்கேற்றனர்.

இந்நிகழ்வை ஒட்டி கலை நிகழ்ச்சிகள் மற்றும் மாட்டு வண்டி சவாரி உள்ளிட்டவை இடம்பெற்றது.

**திருவள்ளூர் மாவட்டத்தில் பொதுமக்கள்** சுற்றுச்சூழலை பாதுகாக்கும் வகையில் புகையில்லா போகியை கொண்டாடுமாறு ஆட்சித்தலைவர் திரு.பிரதாப் கேட்டுக்கொண்டுள்ளார்.

**நாமக்கல் மாவட்டத்தில் நாளை நடைபெறும்** படைவீர்கள் நல திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்வில் படைவீரர்கள் அவர்தம் வாரிசுகள், பங்கேற்று பயடையுமாறு ஆட்சித்தலைவர் திருமதி துர்கா மூர்த்தி கூறியுள்ளார்.

**************

**வானிலை**

தமிழகம், புதுவை, கேரளம் மற்றும் அதனை ஒட்டிய தென்னிந்திய பகுதிகளில் இருந்து அடுத்த 3 தினங்களில் வடகிழக்கு பருவமழை விலகுவதற்கான வாய்ப்புகள் உள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதனிடையே வளிமண்டல கீழடுக்கு சுழற்சி காரணமாக வட தமிழகத்தில் இன்று லேசானது முதல் மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாக இம்மையம் கூறியுள்ளது.

**************

**டென்னிஸ்**

சென்னை சர்வதேச டென்னிஸ் போட்டியின் ஆடவர் ஒற்றையர் முதல் சுற்றில் Sidharth Rawat - Karan Singh-ஐ இன்று எதிர்கொள்கிறார்.

**************

**பேட்மிண்டன்**

புதுதில்லியில் இந்திய ஓப்பன் பேட்மிண்டன் ஆடவர் ஒற்றையர் முதல் சுற்றில் லக்-ஷயா சென் – ஆயுஷ் ஷெட்டியை இன்று எதிர்கொள்கிறார்.

**************

**இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது**